ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ா ஹ்ரு'தி₃ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ முடிச்சோதி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ முடிச்சோதி ॥

## அழகரது வடிவில் ஈடுபடல்

‡முடிச் சோதியாய்⋆ உனது முகச் சோதி மலர்ந்ததுவோ⋆
அடிச் சோதி நீ நின்ற⋆ தாமரையாய் அலர்ந்ததுவோ⋆
படிச் சோதி ஆடையொடும்⋆ பல் கலனாய்⋆ நின் பைம் பொன்
கடிச் சோதி கலந்ததுவோ⋆ திருமாலே! கட்டுரையே (1)

கட்டுரைக்கில் தாமரை⋆ நின் கண் பாதம் கை ஒவ்வா⋆
சுட்டுரைத்த நன் பொன்⋆ உன் திருமேனி ஒளி ஒவ்வாது⋆
ஒட்டுரைத்திவ்வுலகுன்னைப்⋆ புகழ்வெல்லாம் பெரும்பாலும்⋆
பட்டுரையாய்ப் புற்கென்றே⋆ காட்டுமால் பரஞ்சோதீ! (2)

பரஞ்சோதி! நீ பரமாய்⋆ நின்னிகழ்ந்து பின்⋆ மற்றோர்
பரஞ்சோதி இன்மையின்⋆ படி ஓவி நிகழ்கின்ற⋆
பரஞ்சோதி நின்னுள்ளே⋆ படர் உலகம் படைத்த⋆ எம்
பரஞ்சோதி கோவிந்தா!⋆ பண்புரைக்க மாட்டேனே (3)

மாட்டாதே ஆகிலும்⋆ இம்மலர் தலை மா ஞாலம்⋆ நின்
மாட்டாய மலர் புரையும்⋆ திரு உருவம் மனம் வைக்க⋆
மாட்டாத பல சமய⋆ மதி கொடுத்தாய்⋆ மலர்த் துழாய்
மாட்டே நீ மனம் வைத்தாய்⋆ மா ஞாலம் வருந்தாதே (4)

வருந்தாத அருந் தவத்த⋆ மலர் கதிரின் சுடர் உடம்பாய்⋆
வருந்தாத ஞானமாய்⋆ வரம்பின்றி முழுதியன்றாய்⋆
வருங்காலம் நிகழ் காலம்⋆ கழி காலமாய்⋆ உலகை
ஒருங்காக அளிப்பாய் சீர்⋆ எங்குலக்க ஓதுவனே (5)

ஓதுவார் ஒத்தெல்லாம்⋆ எவ்வுலகத்தெவ்வெவையும்⋆
சாதுவாய் நின் புகழின்⋆ தகை அல்லால் பிறிதில்லை⋆
போது வாழ் புனந் துழாய்⋆ முடியினாய்⋆ பூவின் மேல்
மாது வாழ் மார்பினாய்!⋆ என் சொல்லி யான் வாழ்த்துவனே (6)

www.prapatti.com

வாழ்த்துவார் பலராக⋆ நின்னுள்ளே நான்முகனை⋆
மூழ்த்த நீர் உலகெல்லாம்⋆ படையென்று முதல் படைத்தாய்⋆
கேழ்த்த சீர் அரன் முதலாக்⋆ கிளர் தெய்வமாய்க் கிளர்ந்து⋆
சூழ்த்தமரர் துதித்தால்⋆ உன் தொல் புகழ் மாசூணாதே (7)

மாசூணாச் சுடர் உடம்பாய்⋆ மலராது குவியாது⋆
மாசூணா ஞானமாய்⋆ முழுதுமாய் முழுதியன்றாய்⋆
மாசூணா வான் கோலத்து⋆ அமரர் கோன் வழிப்பட்டால்⋆
மாசூணா உன பாத⋆ மலர்ச் சோதி மழுங்காதே (8)

மழுங்காத வைந் நுதிய⋆ சக்கரநல் வலத்தையாய்⋆
தொழுங்காதல் களிறளிப்பான்⋆ புள்ளூர்ந்து தோன்றினையே⋆
மழுங்காத ஞானமே⋆ படையாக⋆ மலர் உலகில்
தொழும்பாயார்க்களித்தால்⋆ உன் சுடர்ச் சோதி மறையாதே (9)

மறையாய நால் வேதத்துள் நின்ற⋆ மலர்ச் சுடரே⋆
முறையால் இவ்வுலகெல்லாம்⋆ படைத்திடந்துண்-டுமிழ்ந்தளந்தாய்⋆
பிறையேறு சடையானும்⋆ நான்முகனும் இந்திரனும்⋆
இறை ஆதல் அறிந்தேத்த⋆ வீற்றிருத்தல் இது வியப்பே (10)

‡வியப்பாய வியப்பில்லா⋆ மெய்ஞ்ஞான வேதியனை⋆
சயப் புகழார் பலர் வாழும்⋆ தடங்குருகூர்ச் சடகோபன்⋆
துயக்கின்றித் தொழுதுரைத்த⋆ ஆயிரத்துள் இப்பத்தும்⋆
உயக்கொண்டு பிறப்பறுக்கும்⋆ ஒலி முந்நீர் ஞாலத்தே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥